**<u>பத்திரிக்கை செய்தி</u>**

## நாமக்கல் மற்றும் கொல்லிமலை அரசு ஐ.டி.ஐ-யில் இரண்டாம்கட்ட கலந்தாய்விற்கான விண்ணப்பங்கள் வரவேற்பு: விண்ணப்பிக்க கடைசி நாள்: 20.08.2019

-----

தமிழ்நாடு அரசு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் நாமக்கல் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும், கொல்லிமலை அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி, பிளஸ்1 மற்றும் பிளஸ்2 தேர்ச்சி/தோல்வி அல்லது ஏதாவது ஒரு டிகிரி/டிப்ளமோ பெற்ற மாணவர், மாணவியர்களிடம் இருந்து **www.skilltraining.tn.gov.in** என்ற ஆன்லைன் மூலமாகவோ அல்லது நேரிலோ 20.08.2019 வரை விண்ணப்பங்கள் வறவேற்கப்படுகின்றன.

இது குறித்து நாமக்கல் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி அலுவலர் திரு. த. அமானுல்லா பாஷா அவர்கள் வெளியிட்ட செய்தி குறிப்பு:

அகில இந்திய அளவில் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடத்தப்பட்ட தர நிர்ணயத்திட்டத்தில் சிறந்த தரமுடைய தொழற்பயிற்சி நிலையங்களாக தெரிவு செய்யப்பட்ட 120 தொழிற்பயிற்சி நிலையங்களில் நாமக்கல் அரசினர் தொழிற்பயிற்சி நிலையமானது தமிழ்நாட்டில் 5வது இடமும், அகில இந்திய அளவில் 12வது இடத்திலும் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நாமக்கல் அரசு ஐ.டி.ஐ-ல் ஆண்கள்/பெண்களுக்கு இரண்டு ஆண்டு படிப்பாக எலக்ட்ரீசியன், டிராப்ட்ஸ்மேன்(சிவில்), மெஷினிஸ்ட் ஆகிய தொழிற்பிரிவுகளுக்கும், ஓராண்டு படிப்பாக மெக்கானிக் ஆட்டோபாடி ரிப்பேர் ஆகிய தொழிற்பிரிவிற்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பெண்களுக்கு மட்டும் ஓராண்டு படிப்பாக கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் & புரோகிராமிங் அசிஸ்டென்ட் மற்றும் டெஸ்க்டாப் பப்ளிஸிங் ஆப்ரேட்டர் போன்ற தொழிற்பிரிவுகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

இன்றைய கால சூழலுக்கேற்பவும் தொழில்நிறுவனங்களின் தேவைக்கேற்பவும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நவீன தொழற்பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. இது தவிர அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி முடிவடையும் தருவாயில் தொழில் நிறுவனங்களில் இலவச பயிற்சி (Internship Training) அரசால் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்குப்பின் அதே தொழிற்நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற்று வழங்கப்படுகிறது. மேலும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற மாணவர்களில் 90%-க்கும் அதிகமானோர் முன்னனி தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள காலியிடங்களில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் பெறப்படவில்லை எனில் அந்த இடங்களை மாற்று இனத்தவரைக்கொண்டு நிரப்பிட ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனால் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இடம் கிடைத்திட வாய்ப்புள்ளது.

மேலும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவ/மாணவியர்களுக்கு பயிற்சிக் காலத்தில் பயிற்சி கட்டணம் முற்றிலும் இலவசம், மாதம் ரூ.500/- உதவித்தொகை, இலவச லேப்டாப், சைக்கிள், பாடபுத்தகங்கள், சீருடை, காலணி, வரைபடக் கருவிகள் மற்றும் இலவச பஸ் பாஸ் ஆகியவை வழங்கப்படுகின்றன. பயிற்சி முடிந்தவுடன் மத்திய அரசால்

தொழிற்தேர்வு நடத்தப்பட்டு தேசிய தொழிற் சான்று வழங்கப்படுகிறது. மேலும் முன்னனி நிறுவனங்கள் மூலம் கேம்பஸ் இன்டர்வியூ நடத்தப்பட்டு வேலைவாய்ப்பிற்கான உத்திரவாதம் வழங்கப்படுகிறது.

இப்பயிற்சிகளில் சேர விருப்பமுள்ளவர்கள் **www.skilltraining.tn.gov.in** என்ற ஆன்லைன் மூலமாகவோ அல்லது பரமத்திரோடு, டோல்கேட் அருகிலுள்ள கீரம்பூர் நாமக்கல் அரசு ஐ.டி.ஐ-க்கு ஒரு பாஸ்போர்டு சைஸ் போட்டோ, டி.சி நகல், பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல், ஜாதி சான்றிதழ் நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் நேரில் வருகை தந்தோ 20.08.2019-க்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு 04286-267976, 04286-267876, 9487207747, 8610530243, 9600597968, 9940856221 என்ற தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

**த.அமானுல்லா பாஷா,**
**பயிற்சி அலுவலர்,**
**அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்,**
**கொல்லிமலை.**